பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 11 2026 12 40

சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியேற்போம் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அனைத்து முக்கிய துறைகளிலும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழகத்தில் வெற்றி மடிக்கணினி திட்டத்திற்காக மாநில அரசு இரண்டாயிரம் கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்துள்ளது.

4. தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

5. இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் உறுதியேற்போம் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

தீபாவளி பண்டிகை, நாளை கொண்டாடப்படுவதையொட்டி, சமூகவலைதளத்தில் இன்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் பிரதமர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த பண்டிகை அனைவரது வாழ்விலும் ஒளியேற்றட்டும் என்று வாழ்த்துவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<><><><><><><><>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அனைத்து முக்கிய துறைகளிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தொழில்நுட்பம் அடிப்படையிலான செயலிகளை உருவாக்குவதில் நமது தொழில்துறை பெரிய அளவில் எட்டியிருப்பதாக தெரிவித்தார்.

<><><><><><><><>

புற்றுநோய் பாதிப்புகளை தடுப்பதில் அதற்கான பரிசோதனை முக்கியப்பங்கு வகிப்பது தொடார்பாக கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன்

அவசியத்தை மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுவதையொட்டி, சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புகையிலை பிடிப்பதையும், மது அருந்துவதையும் தவிர்க்க வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

புற்றுநோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்வதில் தயக்கம் கூடாது என்றும் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

புற்றுநோய் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் குணப்படுத்த இயலமுடியும் என்றும், தமிழகத்தில் உள்ள சென்னை அடையார் புற்றுநோய் மையத்தின் இணை இயக்குநர் டாக்டர். சுவாமிநாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<><><><><><><><>

தமிழகத்தில் வெற்றி மடிக்கணினி திட்டத்திற்காக 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் நடப்பு கல்வியாண்டில், அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பட்டம் மற்றும் பட்டயப்படிப்பு பயிலும் மாணவர்கள் பயனடைவார்கள் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த கல்வியாண்டில் மடிக்கணினி திட்டத்தின்கீழ் பயனடையாத மூன்றாம் மற்றும் நான்காமாண்டு தொழிற்முறை படிப்பு மாணவர்களும் இதன் மூலம் பயனடைவார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<><><><><><><>

மேற்குவங்கத்தில் குடியுரிமை சட்டத்தின்கீழ் விண்ணப்பித்த தகுதிவாய்ந்த அனைவருக்கும் அடுத்தமாதம் இறுதிக்குள் குடியுரிமை வழங்கப்படும் என்று, அம்மாநில முதலமைச்சர் திரு. Suvendu Adhikari கூறியுள்ளார்.

நொய்டா மாவட்டத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், முந்தைய திரிணாமூல் காங்கிரஸ் அரசு, இந்த சட்டத்திருத்தத்தை செயல்படுத்த தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

இதன் காரணமாக நொய்டா மாவட்டத்தில் மட்டும் இரண்டரை லட்சம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

<><><><><><><>

தேசிய மகளிர் மேம்பாட்டு ஆணையம், மகளிர் மேம்பாட்டிற்காக மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்றி வருவதாக அதன் தலைவர் திருமதி. Vijaya Rahatkar கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அரசியல் பாகுபடின்றி மகளிர் மேம்பாட்டு ஆணையம் செயல்படுவதாக கூறினார்.

மகளிர் பாதுகாப்பிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதே தங்களது நிலைப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை, மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று ஆணையம் வலியுறுத்தி வருவதாகவும், திருமதி. Vijaya Rahatkar கூறியுள்ளார்.

<><><><><><><>

மகாராஷ்டிராவில் 10 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைசெய்த வழக்கில் 65 வயதான குற்றவாளிக்கு இயற்கையாக மரணம் அடையும் வரை ஆயுள் தண்டனை விதித்து தானே சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கினை விசாரணை செய்த சிறப்பு நீதிபதி திரு. Laxmikant Bidwai, இத்தீர்ப்பினை வழங்கினார்.

குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படுவதாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<><><><><><><><>

வந்தே மாதரம் தேசிய பாடல் 151 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விடுதலைப் போராட்டத்தில் இப்பாடல் முக்கியப்பங்கு வகித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கு இந்த பாடல் இன்றளவும் உந்து சக்தியாக உள்ளது என்றும், குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் வெளியிட்டுள்ள செய்தியில், வந்தே மாதரம்பாடல் இந்தியாவின் ஆன்மாவாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் இப்பாடல் முக்கியப்பங்கு வகித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

<><><><><><><><>

பராகுவே அதிபர் திரு. Santiago Pena பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான தீர்மானம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

இதனையடுத்து, துணை அதிபர் திரு. Pedro Alliana புதிய அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அதிபர் திரு. Santiago Pena வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

அந்நாட்டு வங்கி மூடப்பட்ட விவகாரம் மற்றும் அது தொடர்பான குற்றவியல் நடவடிக்கைகள் காரணமாக திரு. Santiago Pena பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

<><><><><><><><>

இளையோர் ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

செனகலின் Dakar-ல் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின் மகளிர் 200 மீட்டர் நீச்சல் பிரிவில், இந்தியாவின் Dhinidhi Desinghu-ம் ஆடவர் 200 மீட்டர் நீச்சல்பிரிவில் Tirthank Pegu-வும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

<><><><><><><><>

உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் பிரணவ் வெங்கடேஷ் தங்கப்பதக்கம் வென்றார்.

ஐக்கிய அரபு எமிரேட்டின் Al Ain-ல் நடைபெற்ற இப்போட்டியின் Blitz பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<><><><><><><><>

உலக பாரா கை மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 9 தங்கம், 19 வெள்ளி, 31 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் இளையோர் பிரிவில் மட்டும் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<><><><><><><><>

உலக ஜூனியர் ஸ்கேட்டிங் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Nayana Sri Talluri தகுதி பெற்றுள்ளார்.

<><><><><><><><>

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Vaishnavi Adkar - Rutuja Bhosale இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-5, 6-4 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் Jodie Anna Burrage -அமெரிக்காவின் Robin Montgomery இணையை வென்றது.

<><><><><><><><>

தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் - அஷ்வினி பொன்னப்பா இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்த இணை 21-19, 21-8 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Lalramsanga - Keerthy Manchala இணையை வென்றது.

<><><><><><><><>

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு நட்புணர்வு கால்பந்து போட்டிகளில் பங்கேற்பதற்காக 23 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிஷேக் சிங், ஆகாஷ் மிஸ்ரா, ஜித்தின் உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

முதலாவது போட்டி 12 ஆம் தேதி ஆக்லாந்திலும், இரண்டாவது போட்டி 15 ஆம் தேதி Christchurch-ல் நடைபெற உள்ளது.

<><><><><><><><>

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 135 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 4 புள்ளி 2 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 19 ரன் எடுத்துள்ளது.

வெலிங்டனில் நடைபெற்றுவரும் இப்போட்டி மழை காரணமாக காலதாமதமாக தொடங்கியதை அடுத்து 47 ஓவராக குறைக்கப்பட்டது.

இதில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்க தொடங்கி 41 ஓவரில் 134 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக Tom Latham 55 ரன் எடுத்தார்.

Gurnoor Brar அபாரமாக பந்துவீசி நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

<><><><><><><><>

நியூசிலாந்து ஏ அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் Yashasvi Jaiswal சதம் அடித்தார்.

Lincoln-ல் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 227 ரன் எடுத்துள்ளது.

THE <><><><><> END